# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (23.09.2023 முதல் 27.09.2023)

**அறிக்கைஎண் 076/2023** **தேதி.22.09.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர்மாவட்டத்தின்கடந்தவாரவானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 18.09.23முதல் 21.09.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 34°C ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 81 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 56 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-17 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்குதிசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (18.09.2023 முதல் 21.09.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 27.09.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/09 | 19/09 | 20/09 | 21/09 | தேதி | நாள்-1 23/09 | நாள்-2 24/09 | நாள்-3 25/09 | நாள்-4 26/09 | நாள்-5 27/09 |
| 0.5 | 0.2 | 0.2 | 0.0 | மழை (மி.மீ) | 12 | 3 | 6 | 9 | 12 |
| 32 | 33 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 33 | 33 | 32 | 32 |
| 23 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 23 | 23 | 22 | 22 |
| 6 | 7 | 5 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 8 | 7 | 8 | 8 | 8 |
| 76 | 76 | 79 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 70 | 70 | 80 |
| 68 | 67 | 63 | 56 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 50 |
| 17 | 17 | 16 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 16 | 14 | 14 | 16 | 18 |
| 200 | 230 | 200 | 250 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (23.09.2023 முதல் 27.09.2023)**

வரும் நாட்களில்வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80

சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர்மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாகஉள்ளஅடுத்தஐந்துநாட்களுக்கானமழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **23-09-2023** | 10.0 | 12.0 | 13.0 | 11.0 | 12.0 | 14.0 | 12.0 | 11.0 | 11.0 | 10.0 | 14.0 | 10.0 | 11.0 |
| **24-09-2023** | 1.0 | 3.0 | 3.0 | 3.0 | 3.0 | 4.0 | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 3.0 | 2.0 | 4.0 |
| **25-09-2023** | 4.0 | 5.0 | 5.0 | 5.0 | 4.0 | 5.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 5.0 | 4.0 | 4.0 |
| **26-09-2023** | 7.0 | 8.0 | 9.0 | 7.0 | 8.0 | 10.0 | 7.0 | 7.0 | 7.0 | 7.0 | 10.0 | 7.0 | 6.0 |
| **27-09-2023** | 9.0 | 8.0 | 8.0 | 9.0 | 8.0 | 8.0 | 8.0 | 9.0 | 9.0 | 9.0 | 8.0 | 9.0 | 8.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு மேற்கு மண்டல உட்பகுதிகளில் இலேசானது முதல் மிதமான மழையுடன் 6-18 கி.மீ வரையிலும் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும் மற்றும் நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும்.<br>மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்து விதைப்பினை தொடங்கலாம்.<br>மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் நீர் மற்றும் பயிர் சத்துக்கள் உறிஞ்சுவது குறைவாக காணப்படும். ஆதலால் தழைச் சத்து உரங்களை வேப்பபுண்ணாக்கு அல்லது தார் கலந்து இடவேண்டும். இதனால் சத்துக்கள் உபயோகிப்புத்திறன் அதிகமாக இருக்கும். |
| சோளம் | அறுவடை | மழை எதிர்பார்க்கப்படுவதால் தானியங்கள் மற்றும் சிறு தானியங்கள் அறுவடையை தள்ளி போடவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலா கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| பருத்தி | பூக்கும் பருவம் | பருத்தியில் செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த 15 வது இடைக்கணுவுக்கு மேல் உள்ள பகுதியை கிள்ளி விடவும். மேலும் பூ உதிர்வதை தவிர்க்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 மிலி கிராமை 1 லி தண்ணீரில் கரைத்து நடவு செய்த 60 முதல் 90 வது நாளில் மழையில்லா நேரத்தில் தெளிக்கவும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும் மற்றும் நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும். |

| | | |
|---|---|---|
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 14 - 18 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.<br>மேக மூட்டத்துடன் தூறலும் கலந்து காணப்படுவதால் ஒரு சில இடங்களில் மஞ்சளில் சிக்காடோக்கா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து நோய் தென்பட்டால் குளோரோதளானில் 2 மிலி அல்லது புரோபிக்கோனொஸோல் 2 கி என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| தென்னை | | தென்னை மரங்களைச் சுற்றிலும் வட்டபாத்தியினை ஆழப்படுத்தி மழைநீரை வேர்பகுதியில் சேமிக்க வழி செய்யவும். |
| கால்நடை | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும். |

## குறுஞ்செய்தி

- மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் பயிர் சத்துக்கள் உறிஞ்சுவது குறைவாக காணப்படும். ஆதலால் மெதுவாக வெளிவிடும் வகையில் வேப்பபுண்ணாக்கு கலந்து தழைச் சத்து உரங்களைஇடவேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**